**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2016
## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | இந்து சமயம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- பகுதி ‘அ’ வில் இரண்டு வினாக்களையும் பகுதி ‘ஆ’ வில் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி ‘அ’

**01) மகாபுராணங்களின் பிரதான அம்சங்களை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.**

அ) சமயநெறிகள்

ஆ) இலக்கிய மரபு

இ) வம்ச வரலாறுகள்

ஈ) கோயிற் சிற்பங்கள் $(5 + 5 + 5 + 5 = 20$ புள்ளிகள்)

**02) சிவாகமங்கள் இந்து மதத்தை வளப்படுத்துமாற்றை மேல்வரும் அடிப்படையில் விளக்குக.**

அ) ஆகமம் என்பதன் பொருள் காலம் என்பவற்றைத் தருக.

ஆ) ஆகமம் கூறும் ஆலய அமைப்பையும் கிரியைகளையும் தருக.

இ) தத்துவக் கோட்பாடுகளை விளக்குக. $(2 + 10 + 8 = 20$ புள்ளிகள்)

**03) “இந்து தத்துவங்களுக்கு முன்னோடியாக அமையும் தத்துவம் சாங்கியமாகும்”**

அ) சாங்கியத்தின் காலம், அதன் பிரதான நூல்கள் என்பவற்றைத் தருக.

ஆ) சாங்கியம் ஏற்றுக் கொள்ளும் பிரமாணங்கள் யாவை?

இ) சாங்கிய தத்துவக் கோட்பாடுகளைச் சுருக்கமாக குறிப்பிடுக.

ஈ) பிற்காலத் தத்துவங்களுக்கு முன்னோடியாக அமைந்தவை. $(4 + 3 + 8 + 5 = 20$ புள்ளிகள்)

### பகுதி ‘ஆ’

**04) சங்கரர் வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை ஆராய்க.**

அ) அத்வைத விளக்கமும் சங்கரர் ஏற்றுக்கொள்ளும் பிரமாணங்களும்

ஆ) சங்கரர் வேதாந்தத்தில் பிரமம் பெறும் முக்கியத்துவம்

இ) ஆன்மாவும் ஆன்ம விடுதலைக்கான வழிமுறைகளும் $(4 + 8 + 8 = 20$ புள்ளிகள்)

**05)** “தமிழ் நாட்டில் கோயில் கட்டிடக்கலை வளர்ச்சியில் திராவிட கட்டிடக்கலை தோன்றி வளர்ச்சியடைந்த காலமாக பல்லவர் காலம் உள்ளது” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**06) ஆன்மா பற்றிய சைவ சித்தாந்தக் கோட்பாட்டை மேல்வரும் அடிப்படையில் விளக்குக.**

அ) ஆன்மாவின் இயல்புகள்

ஆ) ஆன்மாவும் மும்மலங்களும்

இ) ஆன்ம இலட்சியமும் வழிகளும் $(5 + 10 + 5 = 20$ புள்ளிகள்)

**07) சமயச் சடங்குகள் பக்தியை வளர்க்கும் சாதனங்களாகும்.**

அ) விரதம் என்பதன் பொருளை வரையறுக்குக.

ஆ) பிள்ளையார் விரதங்களின் வகைகளைக் குறிப்பிடுக.

இ) நீர் மேலே குறிப்பிட்ட பிள்ளையார் விரதங்களில் ஒன்றினை அனுட்டிக்கும் முறை பற்றி விளக்குக.

ஈ) நீர் அனுட்டிக்கும் விரதமொன்றின் மூலம் பெறும் அநுபவம் பற்றி விளக்குக.

$(2 + 4 + 10 + 4 = 20$ புள்ளிகள்)

**08) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

அ) இராமகிருஷ்ணமிசன்

ஆ) இந்து மருத்துவம்

இ) தஞ்சைப் பெருங்கோயில்

ஈ) விஷ்ணுவின் மூர்த்தி பேதங்கள்

உ) நல்வழி

ஊ) திருக்கேதீஸ்வரம் $(4 \times 5 = 20$ புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education